உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 7 | துன்மதி௵ மாசி௴ 1922௵ பிப்ரவரி௴ | இதழ் 11 |
| --- | --- | --- |


உள்ளுறை

பக்கம்.


| | |
| --- | --- |
| திருக்குறள் சைவசித்தாந்த நூலென்பது ... ... | 193 |
| கடவுள் "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி" ... ... | 197 |
| சுந்தரவல்லியின் நற்போதனை ... ... ... | 200 |
| மறுபிறப்பு வாதம் ... ... ... ... | 202 |
| சமரசஞானதீபம் ... ... ... ... | 204 |
| சிவ வழிபாட்டினும் சிவனடியார் வழிபாடு விசேடமென்பது. | 208 |
| நம் சைவ சகோதரர்களுக்கு முறையீடு ... ... | 213 |
| சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு ... ... ... | 216 |


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர்:

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

1921.

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

# திராவிட மாபாடியம்

என்னும்

# சிவஞான பாடியம்

முற்றிலும் வெளிவந்து விட்டது.

ஞான சாத்திரங்க ளெல்லாவற்றிற்கும் தலையாய தாய் நூலாகிய சிவஞான போதத்திற்கு மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த மாபாடிய உரையில் சில பாகங்களே இதுகாறும் அச்சிடப் பெற்றிருந்தன. இப்போது மாபாடிய முற்றிலும் ஆறுமுக நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சிடப் பெற்றுள்ளது. இதின் விலை ரூ. 5—0—0. வேண்டுவோர் சென்னை, தங்கசாலை வீதியில் 300-வது நெ. நாவலர் வித்தியாநுபாலன அச்சுக்கூடத்திலேனும், சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலேனும் தாமதமின்றிப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

---

## அறிவிப்பு.

இப்போது வி. பி. தபாலில் அனுப்பப்படுவன யாவும் ரிஜிஸ்டர் செய்தே அனுப்பப்படல் வேண்டும். சந்தாதாரர்கள் சந்தா ரூபா 1½ யோடு இரண்டணா சேர்த்து ரூபா 1-10-0 கொடுக்க வேண்டியிருக்கிறது. சந்தாதாரர்களே மணியார்டர் மூலமாய் ரூபா 1-6-0 அனுப்பினால் இரண்டணா அநுகூலமாயிருக்கும். எமக்கும் பிரயாசை குறையும். இதை அன்பு கூர்ந்து சந்தாதாரர்கள் சிந்தித்திடுக.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| மலர் 7 | துன்மதி௵ மாசிμீ 1922௵ பிப்ரவரிμீ | இதழ் 11 |
|---|---|---|


## விநாயகர் வணக்கம்.

அகரமென வறிவாகி யுலகமெங்கு மமர்ந்
 தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
 பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொரு ளுண்கினையு மிடர்தீர்ந் தெய்தப்
 போற்றுநருக் கறக்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு
 நிருமலனைக் கணபதியை நினைந்துவாழ்வாம்.

---

## திருக்குறள் சைவ சித்தாந்த நூலென்பது.

திருவள்ளுவ நாயனர் அருளிச்செய்த திருக்குறளானது பல சமயத்தினர்க்கும் பொதுவாகிய நீதி நூலென்பதும், சைவ சித்தாந்த சாத்திரங்கள் சைவ சமயிகட்கு மாத்திரம் உரிய சமய நூலென்பதும் பலருடைய அபிப்பிராயமாயிருக்கிறது. திருக்குறளோடு சைவசித்தாந்த சாத்திரங்களைக் காய்தலுமுவத்தலுமின்றி நடுநிலைமையோடு ஆராய்ந்துணரும் அறிவுடையார்க்குத் திருக்குறளும் சைவ சித்தாந்த நூல்களும் ஒரு பொருளனவே யென்பது விளங்கும். இதனை யுணர்ந்தே ஔவையார்

தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழு முனிமொழியும்—கோவைத்
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசக மென் றுணர்.

என்றருளிச் செய்தனர். சைவ சித்தாந்தமானது மற்றெல்லாச் சமயங்களின் பொது ஒழுக்கங்களைத் தனக்கு அங்கமாகக்கொண்டு சமயாதீதப் பழம்பொருளைக் கைவந்திடச் செய்யும் சமரச சன் மார்க்கமாதலினால் திருவள்ளுவ நாயனார் பல வகைச் சமயத்தார்க் கும் உடன்பாடாயிருக்கும் பொது வொழுக்கங்களை யெடுத்துக் கூறுமுகத்தால் சிறப்பொழுக்கமாகிய சித்தாந்த சைவ ஞான வொழுக்கத்தை யுணர்த்தியருளினர். இவ்விரகசியத்தை யறியா மையால் பலர் சைவ சித்தாந்தம் வேறு திருக்குறள் வேறு யென நினைப்பர். இப்படியே தாயுமான சுவாமிகள் பாடலையும் சிலர் சைவ நூலென்றுணராமல் பொது நூலென்று கூறுகிறார்கள்.

திருவள்ளுவ நாயனார் தமது நூலாரம்பத்தில் கடவுள் வணக் கஞ் செய்யத் தொடங்கி விநாயகர் காப்புக் கூறாமல் தாயுமான சுவாமிகளைப் போலவே "அகர முதல வெழுத்தெல்லாமாதி, பக வன் முதற்றேயுலகு" என்று சிவ வணக்கஞ் செய்தனர். சிவ பெருமானார்க்குச் சொரூப நிலையெனவும் தடத்த நிலையெனவும் இரண்டு நிலைகள் உண்டு. இவற்றுள் சொரூப நிலையாவது அவர் குணங் குறி செயல் முதலியன வொன்றுமின்றிச் சச்சிதானந்தமய மாயிருக்கும் நிலை. தடத்த நிலையாவது அவர் ஆன்மாக்களின்மீது வைத்த கருணை மேலீட்டினால் சிவம் சத்தி முதலிய திருமேனி களைத் தாங்கி படைப்பாதி தொழில்களைச் செய்யும் நிலை. தாயு மான சுவாமிகள் தமது நூலாரம்பத்தில் சிவபெருமானுடைய சொரூப இலக்கணங்கொண்டு அவரைத் தோத்திரஞ் செய்து அதன் பின் பல விடங்களிலும் தடத்தவிலக்கணங்களை யெடுத்து விளக்கித் தோத்திரஞ் செய்தனர். அவ்வண்ணமே திருவள்ளுவ நாயனாரும் தாம் அருளிச்செய்யத் தொடங்கிய நூலுக்கேற்றவாறு, அறிஞர் உய்த்துணருமாறு, சொரூப இலக்கணத்தை வெளிப்படை யாகவும், தடத்த இலக்கணத்தைக் குறிப்பாகவும் எடுத்துக்கூறி சிவபரம்பொருளைத் தோத்திரஞ் செய்தனர்.

நாயனார் நூலாரம்பத்தில் அருளிச்செய்த "அகரமுதல வெழுத்தெல்லாமாதி, பகவன் முதற்றேயுலகு" என்னும் குறட்பா வில் பதி பசு பாசம் என்னும் முப்பொருளுண்மையும், பசுபாசங்க ளோடு இறைவன் அத்துவிதமாய்க் கலந்திருத்தலும், சிவபரத்வ முதலியனவும் கூறப்பட்டுள்ளன. பதி பசு பாசம் என்னும் இம் மூன்றினுக்கும் முறையே அகர உயிரும், ஏனைய உயிர்களும், மெய்யெழுத்துகளும் உவமானப் பொருள்களாக எடுத்தாளப்பட்

டன. "உலகு என்றது ஈண்டு உயிர்கள் மேனின்றது" என உரையாசிரியர் கூறினாரெனினும், உலகு என்னுஞ் சொல் சேதனம் (பசு), அசேதனம் (பாசம்), என்னும் இருவகைப் பிரபஞ்சத்தை யுங் குறிக்குமாதலானும், சேதனப் பிரபஞ்சம் அசேதனப் பிரபஞ் சத்தை யொட்டி நின்றே இறைவனாணையால் தோற்றம் நிலை இறு திகளை யடைதலானும், உலகு என்றதனால் அசேதனப் பிரபஞ்ச மும் கொள்ளப்படும்.

இத்திருக் குறட்பாவில், முதல்வனும் உயிர்களும் பொன்னும் பொன்னாலாகிய பணியும் போல் அபேதமாம் என்று கூறும் மாயா வாதிகளையும், ஒளியும் இருளும்போல் பேதமாம் என்னும் மத்து வரையும், சொல்லும் பொருளும்போல் பேதாபேதமாம் என்னும் விசிட்டாத்துவைதிகளையும் மறுத்து, அகர உயிர்போல் கலப் பினால் ஒன்றாகவும், பொருண்மையால் வேறாகவும், உயிர்க்குயி ராதற் றன்மையால் உடனாகவும் முதல்வன் நிற்பன் என்னும் சைவ சித்தாந்தத்தாற் பெறப்படும் அத்துவித உண்மையை அறிஞர் உய்த்துணருமாறு, நாயனார் அகர உயிரை முதல்வனுக்கு உவமான மாக வெடுத்தாண்டனர். இவ்வாறே நமது மெய்கண்ட தேவ நாயனாரும்

ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளைகா—ணொன்றின்று
லக்கரங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு

என்றருளிச் செய்தனர். இதன்பொருள் "வேதம் ஒன்றென்பதற் குப் பொருள் ஒன்றென்பதேயாம்; வேறு பொருள் படாது. அதற் குத் தாற்பரியம் பதிப்பொருள் ஒன்றே; இரண்டில்லை யென்பதாம். இஃதறியாது ஒன்றென்று சொல்லுகின்ற நீ அப்பதிப்பொருளின் வேறாய பசுவென்றறிவாயாக. பதியுஞ் சேதனமாக யானுஞ் சேத னமாக, என்னைப் பசுவென்றதென்னையெனின், நீ மலத்தோடு கட் டுற்று நின்றாயாகலிற் பசுவெனப்பட்டனை. அற்றேல், இவ்வாறு வேற்றுமை கூறிற் பிரமமில்லையாயின் ஒருபொருளுமில்லை யென் னும் வேதத்திற்குத் தாற்பரிய மென்னையெனின், அகர உயிர் இல்லையாயின் அக்கரங்களில்லையா மென்னும் இம் முறைபற்றி வேதம் பிரமப்பொருள் இல்லையாயின் ஒரு பொருளுமில்லை யென் றோதும் அத்தனை" என்பதாம்.

அகரமும் ஏனைய உயிர்களும் மெய்களும் பதி பசு பாசங்களுக் குவமானமாயினமை இப்பத்திரிகை முதன் மலரில் விரித்துரைத்திருந்தலால் ஈண்டு விரிவஞ்சி விடுத்தாம்.

மெய்கண்டதேவ நாயனாரைப் போலவே அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்

"அக்கரங்க டோறுஞ் சென்றிடு மகரம்போல
நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே"

எனவும், மனவாசகங்கடந்தார் "அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போல், மிக்கவுயிர்க் குயிராய் மேவினேம்" எனவும், உமாபதி சிவாசாரிய சுவாமிகள் "அகரவுயிர்போ லறிவாகி யெங்கும், நிகரிலிறை நிற்கு நிறைந்து" எனவும் அகரவுயிரை முதல்வனுக்கு உவமித்திருத்தல் காண்க.

சுட்டியுணரப்படும் பிரபஞ்சத்தைக் கொண்டு சுட்டியுணரப் படாத கடவுளுண்மை கூறவேண்டியிருத்தலின், "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்றார். இதனால் சுட்டியறியப்படும் பிரபஞ்சம் சித்தும் அசித்தும் என இருவகைப்பட்டு உற்பத்தி திதி நாசம் என்னும் முத்தொழிலையடையும் என்பதும், அது முத்தொழிலையடைவதனால், தனக்குத் தோற்றமும் ஈறும் இல்லாதவனே அதற்குக் கர்த்தாவாதல் வேண்டுமென்பதும் பெறப்படும். அக்கர்த்தாவைப் "பகவன்" என்று கூறியதனாலும், பகவன் என்பது "பகவனேயீசன் மாயோன் பங்கயன்" என்னும் நிகண்டின்படி உருத்திரன் மால் அயன் என்னும் மூம் மூர்த்திகளுக்கும் பொதுப் பெயராயிருத்தலாலும், சிருட்டி திதி சங்காரம் ஆகிய இம்முத்தொழிலும் முறையே பிரமன் மால் உருத்திரன் என்னும் இம்மூவரால் நடைபெறுமென்பது பெறப்படும். முத்தொழில்கள் மும்மூர்த்திகளால் நடைபெறினும், இவர்களனைவரும் தாம் தோன்றி நின்று ஒடுங்கும் நிலைக்களமாயிருக்கும் முழுமுதற் கடவுளாகிய ஒப்பற்ற இறைவனது ஆணைவழி நின்று ஏவல் புரிவோரென்பதும் அவ்விறைவன் ஆதிசத்தி யெனப்படும் அருட் சத்தியோடுங்கூடி விளங்கும் சிவபெருமான் என்பதும் "ஆதிபகவன்" என்றதனால் பெறப்படும்.

இறைவன் தனது சொரூப நிலையில் குணம் குறி செயல் முதலியன ஒன்றும் இல்லாதவனாயிருப்பினும் தடத்த நிலையில் அவன் அவள் அது வெனமுப்பாற் பட்டிருக்கும் பிரபஞ்சத்தைக் காரியப் படுத்தவேண்டி தானும் அவன் அவள் அது வெனுமாறு நின்றருளு

வன் என்பதை யுணர்த்துவார் பகவன் என ஆண்பாற் பெயராற் கூறினர். ஆண்பாற் பெயரால் மாத்திரம் கூறியதென்னையெனில், "ஒரு மொழியொழி தன்னினங் கொளற்குரித்தே" என்னும் இலக்கணம் பற்றியும் முப்பாலினுட் சிறந்தது ஆண்பாலாதலி னும், சர்வ சங்கார காலத்தில் சத்தி சிவத்திலொடுங்கச் சிவம் ஒன்றே சேட்டித்திருத்தலாலும் அவ்வாறு கூறினரென்க.

ஆதி யென்பது நாயனர் தாயின் பேரும் பகவன் என்பது தந்தையின் பெயருமாயிருத்தலினல், இறைவன் உயிர்களுக்கெல் லாம் தாயும் தந்தையுமாகிய சிவசத்தி சொரூபமாயிருப்பவனென் பதையும் இதனல் உணர்த்தியவாறும்.

(இன்னும் வரும்.)

---

## கடவுள் "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி."

(இந்துசாதனப் பிரசுரம்.)

கடவுள் அன்புக்கணியராயினும், மெய்யன் புடையார்க்கே உண்மைக்காட்சி கொடுத்தருளுவர். மெய்யன்பாவது ஒருவரிடத்து அன்பு செய்தற்குரிய காரணத்தை அறிந்து அக்காரணம்பற்றிச் செய்யப்படும் அன்பு. பிற அன்பெல்லாம் பொய்யன்பென்றே சொல்லற்குரியன. காரணத்தை அறியாது செய்யப்படும் அன்பு ஒருபடித்தான பாசாங்கென்றே சொல்லத்தக்கது. காரணத்தை அறியாது செய்யப்படும் அன்பு, அந்தக் காரணத்தைக் கண்டமை போலக் கற்பித்துக்கொண்டு செய்யப்படுவதே யாதலால், உண் மையை உற்றுநோக்குமிடத்து, அது பாசாங்கின் பாற்படும் என் பது அறிவுடையோர்க்கு இனிது புலப்படும்.

சிற்றறிவுடைய ஆன்மாக்கள் கடவுளைக்குறித்த பரம ரகசியங் களை அறிந்துகொள்வது கூடாதென்பது சத்தியம். அவர்கள் அந்த இரகசியத்துறைகளை எல்லாம் பரம்பரையாகத் தமக்குக் கிடைத்த சம்பிரதாயங்களின்வழிக் கைக்கொண்டு விசுவசித்துப் பத்திசெய் தொழுகுதல் வேண்டும் என்பதை ஒருவரும் மறுத்தல் கூடாது. ஆனல், இந்த ஒழுக்கம் எல்லார்க்கும் எல்லாக்காலத் தும் அமைவுடைத்தாகாது. சிறுமகார் தங் குழவிப்பருவத்தே அறிவுக்கெட்டாத் துறைகளைத் தமது இருமுதுகுரவரும் ஆசிரிய ரும் பிறருமாகிய ஆப்தர் வாய்ச்சொல்லை நம்பிக் கைக்கொண் டொழுகவேண்டுவது அவர்தங் கடப்பாடாயினும், அவர்கள்

அறிவுமுதிரமுதிர, அத்துறைகட்குரிய நியாய ஆதாரங்களைத்தமது அறிவின்கண் வைத்துத் தாமாக ஆராய்ந்து கண்டு அமையவேண்டுவது அத்தியாவசியகமாம். அங்ஙனங் காண்பதுண்டானால் மாத்திரமே அவர்களுடைய அறிவு மெய்யறிவெனப்படும். இங்ஙனமே கடவுளைக்குறித்த இரகசியங்களையும் எல்லாரும் எல்லாக்காலத்துங் காண்பது கூடாதாயினும், அறிவு வளரவளர அவற்றை அவ்வறிவிடை வைத்து ஆராய்ந்து கண்டு, அக்காட்சி காரணமாகச் செய்யப்படும் அன்பே மெய்யன்பெனப்படும்.

அறிவுநிலைக்கு எவ்வாற்றானும் எட்டுதல் கூடாத பல அதீதத் துறைகள் பதி முதுநிலையின்கண் உள்ளன என்பதும் மறுக்கொணாத சத்தியமே யாகும். இந்த அந்தரங்கங்கள் பதிஞானங்கொண்டு உணர்வு நிலையின்கட் காண்டற் குரியனவேயாம். இந்த ஞானநிலையை அடைதற்கு, அறிவுகொண்டு காண்டற்குரியன அனைத்தையும் அவ்வறிவுவாயிலாகக் கண்டு, அக்காட்சி யளவாக உண்மைப் பத்திசெய்து, அந்தப் பக்தி காரணமாகச் சத்திநிபாதம் எய்தப்பெறுதல் வேண்டும். கீழ்நிலையின்கண் அறிவால் அளந்து அறிதற்குரியன அனைத்தையும், அவ்வறிவிடைவைத்து ஐயந்திரிபறக் கண்டுகொண்டவர்க்கே, அக்காட்சி காரணமாகப் பெறப்படும் மெய்யன்பினால் சிவமாந்தன்மை வாய்க்கப்பெற்று, அந்தச் சிவத்தைப்போல முற்றுமுணர்தல் முதலிய திப்பியகுணங்கள் விரவுற்று, பதி முதுநிலைக்குரிய அதீதத் துறைகள் எல்லாம் இருந்தாங்கிருப்ப விளங்கி வெளிப்படும்.

ஆகவே பெத்தநிலையிலே எமக்கு இயைந்தளவு மெய்யன்பு சித்திக்குமாறு நாம் அறிவை இயன்றமட்டும் ஈட்டி, அவ்வறிவு கொண்டு காண்டற்குரிய கடவுளுடைய திப்பியங்கள் அனைத்தையும் கண்டமைதல் வேண்டும். அறிவிற் பெரியோரே கடவுளுடைய அருமை பெருமைகளை அறிந்து மெய்யன்புசெய்ய வல்லுநராவர். ஆதலாற்றானே கடவுளைக் "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி" என்றும், "கல்லார் நெஞ்சில் நில்லானீசன்" என்றும் ஆன்றோர் விதந்தெடுத்த தோதுவாராயினர்.

ஆயினும், கல்வியறிவு உண்மைப்பத்திக்கு ஏதுவாதல் போல, ஓர் ஒரு காலத்து அந்தப் பத்திக்குத் தீது செய்வதுமுண்டு. இது உண்மைக் கல்வி எனப்படமாட்டாது. "கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன், நற்றாள் தொழாஅர் எனின்" என்பது நாயனார் வாக்கு. கற்றதன் பயனாக நாம் கடவுளுக்கு அன்புசெய்வ

துண்டானல் மாத்திரமே நாம் கற்றுக்கொண்டது கல்வி எனப் படும். கல்வியால் இறுமாந்து நாம் கடவுளை மறப்பதுண்டானல், அது கல்வி எனப்படமாட்டாது. இத்தன்மைத்தாகிய கல்வியை நோக்கியே "கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்" என்றும், "வெல்லாம லெவரையும் வெருட்டிவிட வகைதந்த வித்தையென் முத்திதருமோ" என்றும், "கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும்" என்றும், பின்னும் பலவாறுகவும் கல்வி மதத்தை மெய்ஞ்ஞானிகள் கண்டித்தொதுக்குவாராயினர். கல்விச் செருக்கால் கருத்து மயங்கிக் கடவுளை மறப்பதுண்டானல், அந்தக் கல்வி மயக்கமாகுமன்றி விளக்கமாகாது. இந்தக் கல்வியைக் கற்றுக் கெடுதலினும் கல்லாது பிழைத்தலே ஆற்றச் சிறப்புடைத்தாம். சிறிது கற்றுவிட்டமையால், அங்ஙனம் கற்றூர் அகிலமனைத்தையும் அளந்து கண்டார் போல் மமதையுற்று அழியாமல், தாம் கற்றுக் கொண்ட கல்வியின் பயனைக் "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது லகளவு" என்பதை மனத்தகத் தழுத்தி, அக்கல்வி சிறிதெனினும், அது காரணமாகக் கடவுளிடத்தே மெய்பன்பு மீதூரப் பெற்று ஈஸ்வரானுக்கிரகத்துக்குப் பாத்திரராவர் எனின், அதுவே கல்வி என்றும், இந்தக் கல்விச் செல்வம் வாய்க்கப் பெற்றோரே கடவுளைக் காண வல்லுனராவர் என்றும் எங்கள் சமயசாஸ்திரங்கள் எடுத்திசைக்கும். கல்வி என்று அறிவுடையோராற் போற்றப்படுவது சமயக் கல்வியும் அதனுக்கு அனுகூலமான உலகக் கல்வியுமன்றி, சமய அறிவு சிறிதும் விரவப்பெறுது, அதனுக்குப் பிரதிகூலஞ் செய்யும் நிரீச்சுரவாத சம்பந்தமான லௌகிகக் கல்வியன்றும். கடவுளைக் காண்டற்குரிய கல்வியறிவுடையானுடைய உள்ளத்திலே கடவுள் தெவிட்டாத தெள்ளமுதாகத் தித்திப்பாராதலின், அவர் "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி" எனப் புடுவர்.

இதுபற்றியே எமது சமயம் மூடபக்தி மாத்திரத்தால் முத்தி சித்திக்கமாட்டாதென்றும், உண்மையை யறிந்து செய்யும் மெய்ப் பத்தியாற்றுனே அது சித்தித்தற்குரியதென்றும் வற்புறுத்திச் சாதிக்கும்.

"தனுகரண புவனபோகந் தற்பரம் பந்தம் வீடென்
றணுவினே டெல்லாமாகி யடைந்திடும் தத்துவங்கள்
இனிதறிந் திவை நிவிர்த்தி முதற்கலை யிடத்தே நீக்கி
நனிபர முணர்ந்தோ னந்தத் தத்துவ ஞானியாவன்."

என்பது சித்தியார். இங்கே தத்துவங்களை "அறிந்து" என்றும், பரத்தை "உணர்ந்து" என்றும் விகற்பங் காட்டப்பட்டமை சிந்திக்கத்தக்கது;

## சுந்தரவல்லியின் நற்போதனை.

(ஞானசித்தி—முற்றொடர்)

கமல - வைகறையில் எழுந்தவுடனே சாணந்தெளித்து மெழுகுகின்றார்களே அதனால் என்ன பிரயோசனம்?

சுந்த - தோழீ! அதுமிகவும் பிரயோசனமானது. வீட்டின் முற்றத்தினும் பக்கங்களினும் நாம் புழங்கும்போது உண்டான அசுத்தங்களும், இரவிலே அதன் தொடர்பாக வந்து குவிந்த கெட்ட அணுக்களும் நிறைந்திருப்பதால், அதைப்போக்கு நிமித்தமாகச் சாணந்தெளித்தல் அவசியமாகும். வீட்டின் உட்பக்கங்களிலே நாம் வாசஞ்செய்யும்பொழுது உண்டான அசுத்த அணுக்கள் அகலுமாறு மெழுகிவரல்வேண்டும். எப்பொழுதும் மெழுக இயலாதாகையால், மெழுகாத நேரங்களிலே சாணங்கரைத்தாவது தெளித்தல் வேண்டும். அப்படிச் செய்யாதொழியின், அவ்வசுத்த அணுக்கள் நிரம்பி நம்மீது சார்ந்து நோயை வருவிக்கும்.

கமல - சாணம் அவ்வசுத்த அணுக்களை நீக்கிவிடுமா?

சுந்த - ஆம், நீக்கிவிடும். சில சமயங்களிலே பிள்ளைகள் இரவில் முற்றங்களில் மலசலங்கழித்துவிட்டால், அதுநாற்றமாயிருப்பதும் அதுநீங்க நாம் சாணந்தெளித்தால் நாற்றம் நீங்கிச் சுத்தமாயிருப்பதும் நீ கண்டிருப்பாயல்லவா. அதன் காரணமென்ன? அக்கெட்ட நாற்றத்தைத் தந்த கெட்ட அணுக்களைச் சாணம் நீக்கிவிட்டதென்பதல்லவா?

இன்னும் நேர்வாளம் என்னும் நஞ்சு விதையை மருந்துப் பொருளாக்க வேண்டி வைத்தியர்கள் கரைத்த சாணிப்பாலில் ஊறவைத்தும்,பின்பு பாலில் ஊறவைத்தும் அதன் நச்சுத்தன்மையை போக்குதலை நீ கேள்வியுற்றதில்லையா. சாணம் நச்சுத் தன்மையை அகற்றுவதில் மிகவல்லமைபெற்றது. அதுபற்றியே நாம் வசிக்குமிடங்களிலுள்ள நச்சுத்தன்மைகள் கெட்ட அணுக்கள் நீங்கும்படி எப்பொழுதும் சாணந்தெளித்தல் மெழுகுதல் முதலிய வழக்கங்களை நம்முன்னோர்கள் கைக்கொண்டார்கள், சாணம்

சாணம் அழுக்கொழிக்கு மென்பதனாலன்றோ வண்ணான் கோடிப் புடவைக்குச் சாணிப்பாலேற்றுகின்றான்.

வீடுகளில் எவரேனும் இறந்துவிட்டால் அவருடையதேகம் எடுக்கப்பட்ட பின்னர், அத்தேகத்தில் நோய்செய்து மரணம் வருவிக்க ஏதுவாயிருந்த கெட்ட அணுக்கள், அங்கேவாயுவின் சம்பந்தத்தோடும், மண்ணிலும், பண்டபதார்த்தங்களிலும், சுவர் முதலியவற்றிலும், உடுபுடைவைகள் படுக்கைகள் முதலியவற்றிலும், சுவறி நிறைந்திருக்குமென்னுங் கருத்தினாலன்றோ, எங்கும் சாணத்தினால் மெழுகியும், சாணங்கரைத்து ஊற்றியும், பல சாமான்களையும் அலம்பிக் கழுவியும், சுத்தஞ் செய்கின்ற வழக்கத்தை யாவருங் கைக்கொண்டிருக்கிறார்கள்.

எப்பொழுதும் எவ்வகைச் சுத்தஞ் செய்தலுக்கும் சாணத்தை எடுத்துக்கொள்ளும் நோக்கம் அதன் குண விசேடத்தை எண்ணியேயாம்.

போசனஞ் செய்யப்புகும்போது இலைபோடுமிடத்தில் அக்கெட்ட அணுக்கள் இருக்குமாதலால், முன்னே வட்டமாக அல்லது சதுரமாக மெழுகும் நோக்கமும் அவ்விடத்திலுள்ள கெட்ட அணுக்களை நீக்குதற்கேயாம். போசன முடிந்த பின்பும் எச்சிற் படிந்த அவ்விடத்தில் எச்சிலினாலாய குற்றங்களையகற்ற வேண்டி மெழுகுவர்.

எனது அதிப்பிரியையாகிய சகியே! இன்னும் இதன்பெருமை சொல்லுகிறேன் கேள்.

எங்கள் சிறுபிள்ளைகளுக்குக் கைகளிலே கொப்புளச்சிரங்கு வந்தால் சாணத்தைக் கரைத்து ஒரு பாத்திரத்தில் வைத்து அதனுள்ளே கையை வைத்திருக்கும்படி செய்ய அச்சிரங்கு மாறிவிடக் காண்கின்றோம். அது எதனால்? அச்சிரங்கிலிருந்த கிருமிகளை அச்சாணத்தின் சத்துக் கொன்றதனாலல்லவா,

இவைகளை நாம் ஆலோசிக்கும்போது சாணத்திலே நச்சுத்தன்மையை அகற்றவும், கிருமிகளைக் கொல்லவும் தக்க ஒரு வகைச் சத்து இருக்கின்றதென்பது புலப்படும்.

கமல - ஆகா! அப்படியா! மிக நன்றாயிருக்கிறது! இதுவரையில் இதைப்பற்றி எனக்கு ஒருவரும் இப்படிச்சொன்னதில்லை, இப்பொழுது கேட்கக் கேட்க அமிர்தமாயிருக்கிறது. எப்பொழுதும் இனி விடியற்காலையிலேயே சாணந்தெளிக்கும்படியும், வீடுவாசல்களை அடிக்கடி மெழுகி வரும்படியும் செய்

வேன். இவ்வளவு குணமுள்ள காரியத்தை நாம் செய்து கொள்வது நம்முடைய சுகத்தின் பொருட்டாதலால், அதை விடுவது மடைத்தனமாகும். பலசனங்களும் பிள்ளைகளும் வசிக்கிற வீட்டிலும் உலாவுகிற முற்றப்பகுதிகளிலும் அசுத்தம் பரவவிடுவது நோய்க்கிடமென்பது என் புத்தியில் நன்றாகப் பதிந்திருக்கிறது. (வரும்.)

---

## மறுபிறப்பு வாதம்

(172 - வது பக்கத்தொடர்ச்சி)

இனி, உலகத்தில் எந்தப் பொருள்களும் மறுபிறப்பை யடையாமலிருக்கவில்லை. நம்முன்னே காணப்படுகிற பிரபஞ்சப் பொருள்களெல்லாம் பல அணுக்கூட்டங்களா யிருக்கின்றன. எந்தப்பொருளும் இப்பொழுதுள்ள நிலைமாறித் தனித்தனி யணுக்களாய்ப் பிரிபினும், பிரிந்த அணுக்கள் மறுபடியும் சேர்ந்து மற்றொரு வடிவாய் வருகின்றது. அது காலஞ் செல்ல மறுபடியும் பிரிகின்றது. பின்பு வேறு ஏதுக்களோடு கூடி மீளவுஞ் சேர்ந்து வடிவுடைப் பொருளாகின்றது. உதாரணமாக மரங்களின் தழைகளைப் பார்ப்போம். அவை மரத்தில் அணு அணுவாய்ச்சேர்ந்து இலைகளாகின்றன. சில சக்திகுன்ற உதிர்ந்து விழுகின்றன. அவற்றை வேறு பயிர்ச் செய்கைக்கு எருவென இடுகின்றோம். எருவென்றாலென்ன? அவற்றின் அணுக்களன்றோ? எருவென இட்ட தழை அணுவாய்ப் பிரிந்து முன் வடிவுமாறி அணுவடிவாகி அங்குள்ள விதையின் சூக்கும சக்தியால் இழுக்கப்பட்டு முளைத்து அப்பயிரின் இலை முதலியவாக வடிவுற்று வருகின்றது. இதில் முன்னிருந்த தழைவடிவு மாறினும் மறுபடியும் அது காரணவடிவாய் அழியாதிருந்து காரியவடிவான இலையாய் மறுபிறப்பெய்தல் பிரத்தியட்சமாம். இப்படி நிகழுதல் ஒருமுறை இருமுறையோடு முடிவதன்று. உலகமுள்ளளவும் அணுக்கள் மாறி மாறி வடிவடைந்து கொண்டே யிருக்கும். இன்னும் உற்று நோக்கில் ஒவ்வொரு கணத்திலும் அணுக்கள் நிலைமாறிக் கொண்டேயிருப்பது புலப்படும். தழைக்குச் சொன்ன இந்த நியாயத்தை மரமுழுவதுக்கும் வைத்துக்கொள்ள வேண்டும். மரத்தின் எல்லா அணுக்களும் நிலைமாறியே வருகின்றன. மரத்தின் அணுக்கள் கூடியதை முளைத்தது என்போம். பிரிதலைப் பட்டது என்போம். மரம்

பட்டபோது அதன் உருவமிருந்தும் எது பட்டது என்று பார்க்கில் அது சீவிப்பதற்கு ஏதுவாயிருந்த சீவ சக்தியே நீங்கியதாக வறிவோம். அது விதையிலிருந்து அணுக்களைக் கவர்ந்து பருத்து வளர்ந்து நின்று பின் அணுத்திரளின் மாறுபாட்டால் அதைவிட்டு நீங்கியதென்று உணரவேண்டும். அணுக்கள் பிரிபினும் மீள ஒன்று கூடி வடிவாவதுபோல, சீவசக்தியும் மரத்தினின்று பிரியினும் சும்மாவிராது வேறோர் விதையைச் சார்ந்து, அதாவது சூக்ஷும அணுக்களைக் கவர்ந்து, விதையாகி மரமாயேவளரும். அணுக்களைப் போலவே அவற்றை நடத்தும் சீவசக்தியும் மாறிமாறி வடிவெடுக்கும். ஒரு நிமிஷப்பொழுதாவது சீவசக்தி சும்மாவிராது. இதை உற்று நோக்கின் மறுபிறப்பு எப்படிப்பட்டதென்பது இனிது விளங்கும்.

இப்படியே மனித சரீர அணுக்களும் மாறிமாறி வருகின்றன. இலைகளும் காய்களும் கனிகளும் விதைகளுமாயிருந்த அணுத்திரளெல்லாம் எங்கள் ஆகாரமாகி இரத்தாதிகளாய் வந்து சரீரமுமாகின்றன. சரீரமும் அணுவணுவாய்ப் பிரிந்து மற்றொன்றுக்கு எருவாய் அல்லது உணவாய் எழுவகை வடிவுள் ஒன்றோடு கூடி அவ்வடிவாய் மறுபிறப்படைதல் நிதரிசனமாம். இப்படி வருதல் ஒருமுறை இருமுறைமட்டுமா? உலகுள்ளளவும் சரீரமெல்லாம் மறுபிறப்படைகின்றன. கிறிஸ்தவர் ஆன்மாவுக்கன்றோ மறுபிறப்பில்லை யென்கின்றார். நாம் சரீரத்துக்கும் மறுபிறப்பு உண்டென்பதைக் காட்டியிருக்கின்றோம்.

இனி, சரீர அணுக்களின் நிலை மாறுதலைப்போலவே, மரத்தின் சீவசக்திக்குக் காட்டிய முறைப்படி மனிதனிடத்துள்ள சீவசக்தியும், முன்பு பிதாவின் உணவோடு கலந்து உட்சென்று அவனது தேகத்தில் தங்கி அங்குள்ள சுக்கிலத்தில் உருவுற்று விதையாகி மாதாவின் கருப்பையிற் புகுந்து அணுக்களைக் கவர்ந்து வளர்ந்து மகவாய் உதிக்கின்றது. மனிதராய் வளர்கின்றது. பின் இறக்கின்றது. இறத்தலாவது நிலைமாறி வலிகுன்றிய அணுத்திரளாகிய சரீரத்தைவிட்டு நீங்குதலேயாம். நீங்கினும் சரீர அணுக்களை முன்பு கவர்ந்து பருத்து வளர்தற்கு ஏதுவாய்ச் சுக்கிலத்தில் தங்கியிருந்த, அதாவது விதையினிடத்து மரமாதற்கு ஏற்ற, சூக்குமசக்தி முன்னரே யிருந்தவாறு போல ஒரு சீவசக்தி சூக்குமமாய் அழிவின்றியிருந்து, மற்றொரு சரீரத்தை, அதாவது அணுத்திரளை, கூடி உருவாதற்கு முயன்று நிற்கும், முயன்று மனித கர்ப்பத்

தில் அல்லது பிறிதொன்றில் தங்கி உருவெடுக்கும். இப்படியே மாறிமாறி வருமன்றி ஒரு நிமிஷமும் சும்மாவிராது. (வரும்)

---

## சமரசஞானதீபம்

(192-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல், பதிபசுபாசபதார்த்தத்திரய போதகராகிய சைவஸித்தாந்திகளே முழு ஆத்திகராதல் கண்டு தெளிக. சைவமொன்றுக்கே ஆத்திகத்வம் நிலைத்தலாலதுவே வேத வேதாந்தபாரங்கசிலர்களால் கொள்ளத்தக்க வைதிகமார்க்கமாயினமை விித்தித்தது. இந்த வுண்மை நியாயங்களால் மாயாவாதமே வைதிகமார்க்கமென்று சாதிக்கப்புகுவது தவறாய்விட்டது. நாத்திகமு மவைதிகமுமாகத் துணியப்படு மம்மதத்துக்கு மாயாவாதம், போலிவேதாந்தமென்னும் பெயர்களுரிமையல்ல வென்னுந்துர்வாதமு மினிச்சீவியாதென்க. மேல் வியவஸ்தையா லப்பெயர்களம்மதத்திற்குரியவே யென்னு நியாயம் போதரலாலதையின்னுங் கொஞ்சம் விளங்கவுரைப்பாம்.

மாயையை யில்பொருளாகக் கொள்ளலாலவர்மதம் மாயாவாதமாவதெப்படியெனின், அவர் ஜகஜீவபரங்களை மிச்சையெனக் கூறுந்தன்மையான் மிச்சாவாதிகளென வவரை யுண்மை நூல்கள் கூறும். (யாமாஸாமாயா) என்பதற்கு எது இல்லாததோ அது மாயையென வவர்மதப்படியே பொருளுண்டாவதாலதுவே மிச்சாவாதம், மாயாவாதமென்றின்னனவாக வழங்கப்பெறும். மிச்சாவாதம் என்பதற்கும், மாயாவாதமென்பதற்கு மொரேபொருள் கண்டுதெளிக. சிவனை யுள்பொருளாக வாதிக்குஞ்சமயம் சைவவாதமெனவும், விண்டுவை யுள்பொருளாக வாதிக்குஞ் சமயம் வைணவவாதமெனவும் பெறப்படுதல் போன் மாயையையுள்பொருளாக வாதிக்குஞ் சமயமாயினன்றோ அது மாயாவாதமாகுமெனின், ஒரு சொல்லுக்குப் பல பொருளுண்மையா லப்பல பொருளும் ஸந்தர்ப்பங்களின் வழி வினியோகம்பெறும். மாயையென்ப தொருபொருளை யில்லாதது எனவவர் கூறுவது சொன் மாத்திரமே யன்றி யவர்க்குள்ள ரோதனங்களெல்லா மம்மாயாவிலாசமேயாம். அநுபவத்திலதை யுடையவராகி வார்த்தை மாத்திரத்தாலது கிடையவே கிடையாதெனக் கூறுவதாலவர் வீண்சொல்லென்னே, கௌரவம் பெறுமா? மாயையுளதென்பது சொன்

மாத்திரமெனவும், அது பொருளாகவுளதாயின் ஞானிகளநுபவத்திற் பிரபஞ்சந் தோன்றாததென்னை யெனவுஞ் சங்கித் துழலுமன்னோரறியாமையைத்தொலைப்பாம். அஞ்ஞானிகளுக்குச்சிவம் விஷயமாகாதது கொண்டு அச்சிவமுஞ் சொன்மாத்திரத்தது எனவும், அதுபொருளாக வுளதாயி னஞ்ஞானிகளநுபவத்திலேன் றோன்றக்கூடாதெனவு முண்டாகுமாசங்கைக்குச் சமாதானமவர் சொல்லட்டும் பார்ப்போம். ஞானிகளுக்கு உலகமும், அஞ்ஞானிகளுக்குச் சிவமும் புலப்படாவென்க. அஞ்ஞானிகளுக்குச் சிவம் விஷயமாகாமையா லதை யில்பொருளென லமையாததுபோன் ஞானிகளுக்கு விஷயமாகாதது கொண்டே பிரபஞ்சத்தை யில்பொருளாகத் துணிவது சர்வாஸங்கதமென்க. ஞானிகளுக்குச் சிவமொன்றே தோன்றிக் கொண்டிருக்கும் அப்படியே அஞ்ஞானிகளுக்குப் பிரபஞ்சமொன்றே தோன்றிக்கொண்டிருக்கும். இவ்வுண்மைகளான் மாயையென்பதொரு பொருளை யாமங்கீகரித்த தில்லையென வவர்கூறுங்கூற்றுச் சிதைவுண்டதென்க. "இல்லாததே தது வேமாயை யெனினில்லாத, தில்லாததேயாகுமெம்மதமே, யில்லா, வொருபொருளுண்டென்ன வுரைக்குமோவேதம், வருபொருள் வேறாகமதிப்பீர்" என யாம் (சித்தாந்தசேகரத்திற்) கூறியபடியாலுங்காண்க. (வருபொருள் வேறாகமதிப்பீர்) என்பதனை ஞானிகளுக்குச் சிவமொன்றே தோன்றிக் கொண்டிருக்குமென மேற்சாதித்த நியாயமே நிறுத்தும். உள்ளதையில்லதாகக் கூறுந் தன்மையால் அஸத்தியவாதிகளென்பது தோன்ற மிச்சாவாதி, மாயாவாதியென வவரையாம் கூறுதல் பிழைபடாதெனவறிக. தம்ம நூல்களிலவர் மாயாவாதமென வேறொன்றை நிரசிக்கத் தொடங்குவதெல்லாந் தம்பாலேறிய குற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டேயாம். ஒருவன்றலைமேன் மலமிருக்கக் கண்டிரங்கிய மற்றொருவ னுன்றலைமேலுள்ள மலத்தைமாற்றுதியென்றவளவில் என்றலைமேன் மலங்கிடையாது, அவன் றலைமேன் மலமிருக்கிறதென வேறொருவனைச் சுட்டிக்காட்டியும், உன்றலைமேற்றான் மலமிருக்கிறதெனச் சொல்லவந்தவனையே திருப்பிக் கூறியுந் தன்றலையிலுள்ள மலத்தைமாற்ற வழிதேடாத மதிகேடன் விருத்தாந்தத்திலீதடங்கலால் விவேகிகள் கழகத்து மணம்பெறுதென்க. மாயாவாதியாகிய தனக்கு நேரிட்டிருக்கும் நாத்திகத்வத்தைப் பரிகரித்துக்கொள்ள மாட்டாமல் உலகாயதனை நாத்திகனென வவன்பழித் துத்திரியும் பண்பிற்றானே முற்றுமிழிந்தழியு

மென்க. (மாயாவாதி பேயாகித், தானேயுரைக்குமங் நூலினுண்மை தன்னைச்சாற்றுவாம்) என அருணந்தி சிவாசாரிய சுவாமிகளும், (மாயாவாதப்பேயா வுனக்குத், தேவரிலொருவனுண்டாக, மேவருநரகம் விடுத்தலோவரிதே.) என உமாபதி சிவாசாரிய சுவாமிகளும் முறையே சிவஞானசித்தியிலும், சங்கற்ப நிராகரணத்திலுங் கூறினாராகலி னவற்றினுண்மைகளை யறிந்தோர்பாற் கேட்டடங்குக. இப்படி யுண்மை வெளிப்பட்டமையால், ஸ்ரீமங் மணிவாசக மூர்த்திகள் கடிந்தருளிய மாயாவாதம் தம்மதல்லவெனத் தப்பித்துக்கொள்ள வழிபார்த்தலுந் தடுமாறிப்போயிற்றென்க.

இந்த விசாரத்தால், மாயாவாதப்பேரவரை விட்டொழியாமை வெளிப்பட்டதனாற் போலி வேதாந்தப்பேரு மவரைவிட்டதில்லையென்பதை நிரூபிப்பாம். மேலிடத்தில் வியவஸ்தைபண்ணி மாயாவாதமென்பது நாத்திகம், அவைதிகம் என்னும் பெயர்கட்குரிய சிறுடைத்தெனத் தீர்மானித் திருக்கின்றோமாகையா லதுவே போலிவேதாந்தமென்பதை நிலைக்கப்பண்ணும். இவ்வளவாபாசத்தினதாகியவதைவேதாந்தமாகிய சைவதுல்யமெனவாவது, சைவாதீதமெனவாவது எந்த விவேகத்தால் நாமொப்புக்கொள்ளலாம்? வேதாந்தம் என்பது வேதமுடிவு என்று பொருள்படும். வேதத்தின் முடிவு சிவமென்றே தீர்மானம். அச்சிவம் ஸச்சிதாநந்த கநீபூதமாயுள்ளது. அதற்கு அநிர்தஜடதுக்காதிகள் கூறுவது வேதாந்தமாகாது. இங்ஙனமாக, ஜநநமரணப்பட்டுழலு முயிர் வர்க்கங்களும், தநுவாதிகளாகக் காரியப்பட்டழியு மாயாப்பிரபஞ்சங்களுமந்தப் பரமசிவத்தின் விபூதியெனக் கூறிப் பிரலாபிக்குஞ் சித்தாந்தத்தை நாமெப்படி வேதாந்தமென்னலாம்? தத்வமஸியாதி வேதாந்தங்களால் ஸித்திக்கு முண்மை யெதைப்பயக்குமெனின், (ஆரணங்கடருதத்துவம்மஸி யெனும்பதப்பொருளறிந்திடாய், காரணம் மதுவுநீயுமென்றிருமை கண்டு வேறின்மைகருதலால்) என்னும் வசனத்தாற் கண்டுணர்க. இத்தியாதி மஹாவாக்கியங்களை வேதாந்தமென்பதிற் றட்டில்லை. இவற்றினுண்மையுமுரிமையுமான பொருள்களையன்றி மதாந்தரஸ்தர் அந்யதாகூறும் ரோதனர்த்தங்களெல்லாம் எப்படி வேதாந்தமாகும்? அபார்த்தங்களாற் பிரலாபித்துக் கொண்டிருப்பவரெல்லாமுந் தங்களை வேதாந்திகளெனக்கூறித் திரிவதால் அவருளக்ரகண்யனாகிய மாயாவாதியுமப்படியே சொப்பனங் கண்டுகொண்டிருக்கின்றனன்.

அவற்றினுண்மைப் பொருளைக் கவர்ந்து அநுஸந்தானஞ் செய்யுமாற்றலுடையவ னெவனோ வவனேயன்றோ வேதாந்தியென வெளிப்படக்கூடும்? அவனெவனாபிருக்கக் கூடுமெனின், வேதாந்தத்திற் கூறிய ஸச்சிதாநந்த லட்சணத்தைக் காலத்திரயத்துஞ் சிதையாமற் பாதுகாத்துக் கொள்ளத்தக்கவனாய்ச் சிவத்தியான விசிட்டமேற் கொண்டொழுகு முத்தமாதிகாரியாதல் வேண்டும். அந்த லட்சணங்குன்றாது உபசீவிப்பது சிவாகம ஸேவை செய்தாலன்றி விளங்காது. அச்சிவாகமநிஷ்டை பெற்றவரே சைவராகையால் அவரே வேதாந்திகளாதல் சாலும். வேதத்தினந்தத்தையறிந்தவரே வேதாந்திகளாவதுண்மையாக, சிவாகமங்களையறிந்தபேர் வேதாந்திகளாவ தெங்ஙனமெனின், வேதத்தினந்தத்தை யறியுந் தன்மையி லுண்மையறிவும், பொய்யறிவுமாக வெளிப்படலால் உண்மையறிவின்படி வேதாந்தமும், பொய்யறிவின்படிப் போலி வேதாந்தமுஞ் சித்திக்கும். ஒவ்வொருவருந் தாந்தாங்கூறும் பொருளேயுண்மையெனக் கோடலினதனை யிதுதானென நாட்டுதல் வேறு சான்றிருந்தாலன்றியமையாது. அச்சான்றே சிவாகமமாகையா லதனையுணர்ந்தவரே வேதாந்திகளென்றல் பொருந்தும். வேதத்தையும், வேதாந்தங்களாகிய வுபநிடதங்களையுஞ் சொன்ன சிவனே சிவாகமங்களையுஞ் சொன்னாராகையால். வேதத்தை ஸூத்திரமும், சிவாகமத்தைப் பாடியமுமாகக் கொள்ளுஞ் சைவமார்க்கமே வேதாந்தமெனவுஞ் சித்தாந்தமெனவும் பெறும். மூலத்தால் வேதாந்தமும், பொருள் விளக்கத்தால் ஸித்தாந்தமுமாகி விளங்குஞ் சைவமார்க்கத்தோடு எப்படியோ மாயாவாதம் ஸாம்யம் பெறும்? அம்மாயாவாதத்துக்கு முன் சிவாகமம் இருளுக்கு முன் கதிரொளியாகுமாகையால். இருளுங்கதிரொளியு மொன்றாகு மெனினன்றோ, மாயாவாதமுஞ் சைவமுமொன்றாகும்? அப்போதல்லவோ வம்மாயாவாதம் வேதாந்தமுமாகும்? அப்படியே சித்தாந்தமுமாகும்? பின்னர் வேதாந்தசித்தாந்த சமரசமுமதுவே யென்னலுமாகும்?

(வரும்)

# சிவ வழிபாட்டினும் சிவனடியார் வழிபாடு விசேடமென்பது.

பூவில் மணமும் மணியில் ஒளியும் போல் எங்கும் நிறைந்து எல்லாமாயும் அல்லதுமாயும் இருக்கும் கற்பனை கடந்த தற்பரம் பொருளாகிய சிவபெருமானை நாம் வழிபட்டு உய்யக்கூடிய இடங்கள் குரு, லிங்கம் (விக்கிரகம்), சங்கமம் (சிவனடியார்கள்) என்னும் இம்மூன்றுமாம். இவற்றுள் குருவழிபாடு தீக்கை பெற்றோரால் தமதாசிரியரிடத்து மாத்திரம் செய்யப்படுவது. விக்கிரக வழிபாடும் சிவனடியார் வழிபாடும் எல்லோராலும் எவ்விடத்தும் செய்யப்படுவன. இவ்விரண்டினுள்ளும் அதிக பலனைத் தருவது சிவனடியார் வழிபாடே யென்பது சைவ நூற்றுணிபாம்.

சிவலிங்க முதலிய வடிவங்களைப் பூசித்தல் சிவபெருமானை மாத்திரம் பூசிப்பதாகும். சிவனடியாரைப் பூசித்தல் அவர்களை மாத்திரமன்றி அவர்கள் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு இனிது வீற்றிருக்கும் சிவபெருமானையும் பூசிப்பதாகும். சிவபெருமான் குறைவிலா நிறைவாய் வேண்டுதல் வேண்டாமையற்றிருப்பதனால் அவரைப் பூசிப்பது அவர் பிரயோஜனங்கருதிபதாகாமல் பூசிப்பவர் பிரயோஜனங் கருதியதாகும். சிவனடியார்களுக்கு வேண்டுவன கொடுத்துப்பூசிப்பது பூசிப்பவர் தமக்கு மலநிவிர்த்தியாகிய பிரயோஜனத்தைத் தருவதோடு, அவ்வடியவர்களுக்கும் பயன் படுகின்றது.

திருமந்திரம்.

படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே.

சிவபெருமான் பக்குவம் வாய்ந்தசகலராகிய ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்க வேண்டி ஞானாசிரியத் திருக்கோலம் கொண்டருளும்போது மானிட ரூபங்கொண்டே எழுந்தருளுகின்றார்.

திருவிளையாடற்புராணம்.

“பத்திவழி நிற்பார்க்கு, வினைத்துயர் தீர்த்திட வெடுத்த
வடிவென்ப தவனடியார் வேடமன்றோ”

சிவனடியார் கூட்டத்தில் சிவபெருமானும் ஒருவராயிருந்து நீங்காதுறைகின்றார். இது சிதம்பரத்தில் தில்லை வாழந்தணரோடு தாமும் ஒரு வீட்டாராக இருத்தலாலும் அறியப்படும்.